# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097157

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 3/2019 Date: நாள் 13.09.2019

2. (i) Act சட்டம்: Prevention of Sections பிரிவுகள்: 7 of the P.C.
   (ii) Act சட்டம்: Corruption (Amendment) Sections பிரிவுகள்: (Amendment) Act
   (iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்: 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 09.09.2019 Date to : நாள் வரை [illegible] 12.09.2019
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.30hrs Time to : நேரம் வரை 11.00hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.09.2019 Time : நேரம் 08.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 09.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 கி.மீ. தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தெற்குபனையூர் கிராம VAO அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S District
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கி. வீரபுத்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2019 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Data Assistant (g) Address : முகவரி No. 2/36, மெயின் ரோடு, தெற்குபனையூர், (PO), திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை தாலுக்கா, தெற்குபனையூர் கிராம VAO, திரு. வீரமணி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - [illegible] தாமதம் -

* GCP 240-34(Type 2) 90 000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 13.09.2019-ந் தேதி காலை 08.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் ஆகிய நான் அலுவலகத்திலிருந்த போது K.வீரபுத்திரன், வயது.32/2019, S/o.கிருஷ்ணமூர்த்தி, 2/36, மெயின்ரோடு, தெற்குபனையூர், திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு:- அனுப்புதல் கி.வீரபுத்திரன், S/o.கிருஷ்ணமூர்த்தி, 2/36, மெயின்ரோடு, தெற்குபனையூர் & (PO), திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் பெறுதல் உயர்திரு லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை, நாகப்பட்டினம் அய்யா/அம்மையிர், நான் திருக்குவளை தாலுக்கா தெற்குபனையூர் கிராமம் மெயின்ரோடு கதவு எண் 2/36 என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்துவருகிறேன். நான் தற்சமயம் சென்னையில் Temporary Data Assistant ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் தெற்குபனையூர் கிராம புல எண்கள் 122, 129, 133, 183 ஆகியவற்றில் உள்ள 0.95 ஏர்ஸ் நிலத்தை வாங்கி திருக்குவளை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 281/2009 ஆக பதிவு செய்திருந்தேன். மேற்படி நிலத்திற்கு உண்டான கூட்டு பட்டாவில் எனது பெயரையும் சேர்த்து பட்டா மாறுதல் கேட்டு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction. (S.S.E)

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 13/09/19

Signature of the Officer in-charge, Police Station [signature] 13.9.2019
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.09.2019 - 11.30 hrs.

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை (G. RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption
Nagapattinam

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 3/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u> :-

ஆன்லைனில் விண்ணப்பித்திருந்தேன். 09.09.2019 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு எங்க ஊர் தெற்குபனையூர் கிராம VAO அலுவலகத்திற்கு சென்று VAO திரு.வீரகுமார் அவர்களிடம் பட்டா மாறுதல் தொடர்பாக கேட்டுவிட்டு, மேலும் தெற்குபனையூர் கிராம பழைய புல எண் 128/25ல் உள்ள 0.04.07 ஏர்ஸ் நிலத்தை எனது தந்தை கிருஷ்ணமூர்த்தி பெயரிலிருந்து எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய மற்றொரு மனுகொடுத்தேன். அதற்கு VAO திரு.வீரகுமார் அவர்கள் ஆன்லைனில் விண்ணப்பம் செய்த பட்டா மாறுதலில் மிகவும் கஷ்டப்பட்டு உங்களுக்காக நான் பரிந்துரை செய்ததால்தான் உங்கள் பெயரில் பட்டா மாற்றம் ஆனது, இந்த புதிய நத்தம் பட்டா மனுவினை சரிபார்த்து இந்த பட்டாவையும் வாங்கி தந்துவிடுகிறேன், இரண்டுக்கும் சேர்த்து ரூபாய் 8,000 கொடுங்கள், உங்களுக்கு உண்டான முதல் பட்டா ஆணையை நான் திருக்குவளை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வாங்கி வந்துள்ளேன் அதை கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு VAO வீரகுமார் அவர்கள் சரி பணத்தை கொடுத்துவிட்டு இரண்டு பட்டா ஆணையையும் சேர்த்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு 12.09.2019 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு தெற்குபனையூர் கிராம VAO அலுவலகத்திற்கு சென்று VAO திரு.வீரகுமார் அவர்களிடம் பட்டா மாறுதல் தொடர்பாக கேட்டேன். அதற்கு VAO திரு.வீரகுமார் அவர்கள் ரூபாய் 8,000 பணம் கேட்டேனே என்ன ஆயிற்று என்றார். நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னதற்கு, VAO திரு.வீரகுமார் அவர்கள் சரி 7,000 ரூபாயாவது நாளை கொடுத்துவிட்டு உங்களுக்குண்டான பட்டாவை வாங்கிக்கொள்ளுங்கள், பணம் கொடுக்கவில்லை என்றால் நான் இரண்டாவது பட்டாவை பரிந்துரை செய்து அனுப்பமாட்டேன், இந்த பட்டா நத்தம் பட்டா என்பதால் ஆன்லைனில் பதிவு செய்யமுடியாது அதனால் இந்த மனு என்மூலமாகதான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்லவேண்டும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். எதற்கு பணம் என்று கேட்டதற்கு, பணம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்று VAO திரு.வீரகுமார் சொன்னார். நான் வேறுவழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். தெற்குபனையூர் கிராம VAO திரு.வீரகுமார் அவர்கள் என்னிடம் பட்டா மாற்றம் செய்ய பரிந்துரை செய்ததற்கும் செய்யபோவதற்கும், லஞ்சமாக கேட்ட ரூபாய் 7000 த்தை VAO திரு.வீரகுமார் அவர்களிடம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட தெற்குபனையூர் கிராம VAO திரு.வீரகுமார் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை

எடுக்க நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, ரூபாய் 7000 த்தை ரெடிபண்ணிக்கொண்டுவந்து, இன்று 13.9.2019 தேதி இந்தப் புகாரை கொடுக்கிறேன். பட்டா மாற்றும் செய்ய ரூபாய் 7000 லஞ்சம் கேட்ட தெற்குபனையூர் கிராம VAO திரு.வீரகுமார் அவர்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஆங்கிலத்தில் ஒப்பம்)K.Veeraputhiran (K.VEERAPUTHIRAN) 13/09/2019.SUBMITTED Sir, Received this computer typed written complaint from the complainant on 13.09.2019 at 08.00 AM, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 13.09.2019 at 09.30 AM in Nagapattinam Vigilance and Anti-Corruption Detachment Crime No.3/2019, U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018.

(G.RAMESH KUMAR) 13.9.2019
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

I am submitting the Original F.I.R, along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials.

(G.RAMESH KUMAR) 13.9.2019
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.